**MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED EXPANSION OF M/s. DANBLOCK BRAKES INDIA PRIVATE LIMITED, LOCATED AT PLOT No.: K4, PHASE-II, SIPCOT INDUSTRIAL COMPLEX, GUMMIDIPOONDI, PAPPANKUPPAM VILLAGE, GUMMUDIPOONDI TALUK, TIRUVALLUR DISTRICT.**

**Date:** 09.05.2023 **Time:** 11.00 a.m.,

**Venue:** Jayakumari Hall, JFN Paradise, Pethikuppam Gate, Gummidipoondi.

Present:

1. Thiru S. Asokan, District Revenue Officer, Tiruvallur.
2. Thiru P.S. Livingston, District Environmental Engineer, TamilNadu Pollution Control Board, Gummidipoondi.
3. Tmt Preethi, Tahsildhar, Gummidipoondi.

The List of Public and the representatives of the industry attended the Public Hearing is appended with this minutes.

The District Environmental Engineer welcomed the participants of the Public Hearing and requested the District Revenue Officer to preside over the proceedings.

The District Revenue Officer informed that the purpose of this Public Hearing is to hear the views of the Public as well as the activists, which will be communicated to the concerned authorities, and hence requested that anyone can express their views freely.

Then the District Environmental Engineer informed that the representative of the industry would explain about the project and then the Public can express their views, and requested the representative from the industry to explain about the salient features of the Project.

The Environmental Consultant for the project made the presentation about the salient features of the proposed project on behalf of the industry. He informed that M/s. Danblock Brakes India Private Limited, located within the SIPCOT Industrial Complex, Gummidipoondi is engaged in the production of 25,000 MT/Year of Grey and Ductile Iron, using Steel Scrap, Pig Iron, Ferro

Alloys, Cast Iron Borings and other admixtures, which the industry proposes to enhance the production to 95,000 MT/Year, at an estimated cost of Rs. 60 Crores. He briefed about the locational settings of the Industry and added that the proposed expansion would create employment opportunity to another 100 people. He indicated that Pulicat lake Bird Sanctuary is located at a distance of 8.5 k.m, and the nearest airport is Chennai, which is at a distance of 45.30 k.m., and indicated that that this not a water polluting/ effluent discharging industry.

The consultant then briefed about the air pollution aspects of the project, wherein he informed that the existing two numbers of 6T/H Induction Furnaces are provided with Fume Extraction System followed by Common Cartridge Bag Filter and Stack of 30 m height, three numbers on 1T/H Induction Furnaces are provided with Fume Extraction System followed by Common Cartridge Bag Filter and Stack of 15 m height, Sand Shake-out Plant is provided with Cartridge Bag Filter and Stack of 30 m height and the Sand Plant is provided with Cartridge Bag Filter and Stack of 30 m height, and other sources of air pollution are provided with Cartridge Bag Filter/ wet scrubber and Stack arrangements. He added that the proposed Induction Furnace of 10 T/H Capacity, Sand Plant, Cool Drum and Online Shot Blast would be provided with Cartridge bag Filters and Stack arrangements for the control of air pollution. He shows the photographs depicting the existing air pollution control measures and informed that the studies on air quality and noise were carried out for a radial distance of 10 k.m., and the levels are within the National Ambient Air Quality Standards. He emphasised that all the emission sources are already provided with/ proposed with Cartridge Bag Filter and Stack for the control of air pollution, and as such there would not be any adverse impact on air quality. The consultant further added that the quality of water, both surface and ground, characteristics of soil were also studied, for a radius of 10 k.m., from the project site, which are found within the acceptable levels.

On the impact due to the proposed expansion, the consultant stated that because of the expansion, the quantity of the sewage generated, effluent from cooling, used/spent oil generated would increase and to address the same the existing 25 KLD Capacity Sewage Treatment Plant would be augmented to a capacity of 40 KLD, and the treated sewage is utilized for Green Belt Development, within the premises, cooling water would be recycled, used/spent oil would be sold out to authorized recyclers, and that the project would not discharge any industrial effluent. Then the consultant briefed about the scheme of the augmented Sewage Treatment Plant.

On the control of air pollution, the consultant informed that bag filters/ wet scrubbers are/ would be provided with all the emission sources, green belt developed/ further developed to contain air pollution, sprinkler employed to suppress the dust during construction, Personal Protective Equipments provided to all workers, to protect the workers from noise, Diesel Generator Sets are provided with the required acoustic enclosures. He pointed out that Green Belt is developed over 5.12 acres, wherein 1368 trees are already planted and maintained and another 1700 trees would be planted and maintained.

The Consultant informed that a Capital Expenditure of Rs. 155 Lakhs would be incurred for environment protection related activities and operational cost of Rs.25 Lakhs every year, and that the industry on Corporate Environmental Responsibility would spent 32 Lakhs for developing Government Girls Higher Secondary School, Thervazhi and Panchayat Union Middle School, New Gummidipoondi.

Then the District Environmental Engineer then requested the Public to offer their views about the project. He informed that opportunity would be given to every-one to offer their views and requested to spelt-out their name and area, before expressing the views and that all the views expressed would be recorded and communicated to the concerned authorities for the required action.

Thiru Jayachandran of Pathapalayam, Union Council Member informed that their Village ( S R Kandigai Panchayat) is not covered under Corporate Social Responsibility, even though a sum of Rs.32 Lakhs is allocated under Corporate Social Responsibility, even though the industry is located within S R Kandigai. The Consultant requested the Industry Representative to clarify in this regard. Thiru L Senthil Kumar, Plant Director informed that sufficient funds under Corporate Social Responsibility would be allocated to S R Kandigai Village. Thiru Jayachandran and others insisted to know the reason for not allocating any money for S R Kandigai Village. Thiru Jayachandran further stated that the employment opportunity should be given to the locals, ie people from their Panchayat. At this juncture District Environmental Engineer clarified that the Rs. 32 Lakhs, that is mentioned in the report is Corporate Environmental Responsibility, and requested the industry representative to spelt out the allocation proposed under Corporate Social Responsibility. To this, Thiru L Senthil Kumar, Plant Director informed that an additional amount of Rs. 20 Lakhs would be earmarked under Corporate Social Responsibility, in which the amount would be spent to S R Kandigai Panchayat.

Thiru S Ramajayam, District Councillor, welcomed the Project and that 100% of the employment opportunity should be given to the Public of Panchayat in which the industry is located.

Thiru Sunandha Reddy from Telungana State (Spoken in English) informed that as the project is generating employment opportunities, he welcomes the Project. He added that unemployment is a major pollution, and added that more Green Belt, over and above the statutory 33% proposed should be developed, in the form of avenue plantation, planting medicinal possibilities and rain water harvesting.

Thiru Krishnamoorthy, Environmentalist from Hyderabad (spoken in English) recommended the project for clearance and required that the industry to plant medicinal plants, conduct medical camps and to distribute free medicines.

Thiru R Seran, an un-employed youth from Edur village welcomed the project, and require employment opportunities to the locals.

Thiru Sathya of Pappankuppam, informed that in the event the expansion of the plant results in employment opportunities, they would be happy, and informed that the job opportunities are given to locals, ie the people of local panchayat and permanent job opportunities be given.

Thiru Suresh, from Naga Raja Kandigai stated that even at this level of production, there is pollution in SIPCOT, and if the expansion is allowed pollution would increase, and hence objecting the project on behalf of Amma Makkal Munnetra Kazhagam.

Thiru Murali of S R Kandigai informed that he is welcoming the project and opined that job opportunities are not given to locals and priority is given to North Indians and the local people are neither getting job in local industries, to the people who have given lands for the SIPCOT. He added that in Pappankuppam there is no Hospital and hence a Hospital to be constructed under Corporate Social Responsibility. He pointed out that the company has not preferred to support the School in Pappankuppam, the revenue village in which the Industry is located, and wanted to develop the Pappankuppam School. He informed that none of the industry in SIPCOT developed 33% Green Belt and wanted TamilNadu Pollution Control Board to ensure this.

Thiru L Senthil Kumar, representative of the industry assured that they would provide the required support to develop the infrastructure of the local village under Corporate Social Responsibility.

Thiru Jayachandran further informed that there is no reference on the water source. He informed that the statement in the report that air quality is within the standard is not correct. To this the consultant informed that the data is taken over three months, in various places and the average values are reported. It is further clarified that the water requirement is met from SIPCOT sources, no ground water is drawn, and that this is not a water intensive industry, and that the cooling water is kept under closed cycle. Thiru Jayachandran added that the detail on water consumption is not explained for

which the consultant informed that the those details are elaborated in the Environmental Impact Assessment Study Report, which is available in the web site of Tamilnadu Pollution Control Board.

Thiru Jayachandran opined that the conduct of Public Hearing is not adequately communicated, to which the District Environmental Engineer informed that the Public Notice regarding the conduct of the Public Hearing is published in one English and one Tamil News paper on 06/04/2023, the Environmental Impact Assessment Study Reports along with Executive Summary, both in English and Tamil, as hard Copy and Soft Copy are made available in the offices of the necessary Public Offices. To this Thiru Jayachandran opined that the information on the conduct of Public Hearing be communicated in the local area through announcement in auto-rikshaws.

Ten numbers of representations are handed over in the meeting, wherein all the representations of organizations having address of the State of Andra Pradesh/ Telangana welcomed the project; but the Project Proponent shall undertake more Green Belt, employment to locals, conduct health camps, distribute free medicines, etc.

Then District Environmental Engineer summed up the proceedings of the meeting to the participants and thanked every-one for the smooth conduct of the Public Hearing.

The meeting came to an end.

District Environmental Engineer,
TamilNadu Pollution Control Board,
Gummidipoondi.

District Revenue Officer,
Tiruvallur District,
Tiruvallur.

**திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி . வட்டம், பாப்பன்குப்பம் கிராமம், கும்மிடிப்பூண்டி, சிப்காட் தொழிற்பேட்டை பேஸ்–II, பிளாட் எண்.K–14–ல் அமைந்துள்ள தி/ள்.டான்பிளாக் பிரேக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், தொழிற்சாலையின் விரிவாக்கத் திட்டத்திற்காக நடத்தப்பட்ட பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கைகள்**

நாள்: 09.05.2023 நேரம்: காலை 11.00 மணி

இடம்: ஜெயக்குமாரி ஹால், ஜேஎப்என் பாரடைஸ், பெத்திக்குப்பம் கேட், கும்மிடிப்பூண்டி.

முன்னிலை:

1. திரு எஸ். அசோகன், மாவட்ட வருவாய் அலுவலர், திருவள்ளூர்.
2. திரு பெ.சே. லிவிங்ஸ்டன், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கும்மிடிப்பூண்டி.
3. திருமதி.கே.ப்ரீத்தி, வட்டாட்சியர், கும்மிடிப்பூண்டி.

----------

கருத்து கேட்கும் கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகளின் பட்டியல் இவ்வறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரையும் வரவேற்று மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களை கூட்டத்தை தலைமை ஏற்று நடத்தி தரும்படி கேட்டுக் கொண்டார்.

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் இக்கூட்டதின் நோக்கம், பொதுமக்கள் மற்றும் சமூக/ சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் கருத்துக்களை அறிந்து, அவற்றை தொடர்புடைய அதிகார அமைப்புகளுக்கு தெரிவிப்பதாகும் என்றும், எனவே அனைவரும் தாங்கள் தெரிவிக்க விரும்பும் கருத்துக்களை தெரிவிக்கலாம் என்றும் அறிவித்தார்.

பின்னர் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் தொழிற்சாலையின் சுற்றுச்சூழல் திட்ட ஆலோசகர் திட்டம் குறித்து விளக்குவார் என்றும், அதன் பின்னர் பொதுமக்கள் தாங்கள் தெரிவிக்க விரும்பும் கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று கூறி, திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலையின் சுற்றுச்சூழல் திட்ட ஆலோசகரை கேட்டுக்கொண்டார்.

தொழிற்சாலையின் சுற்றுச்சூழல் திட்ட ஆலோசகர் அவர்கள் தொழிற்சாலையின் விரிவாக்க திட்டத்தின் முக்கிய கூறுகள் குறித்து ஒரு விளக்க காட்சி வாயிலாக எடுத்துக்கூறினார். அவர் கும்மிடிப்பூண்டி சிப்காட்

தொழிற்பேட்டையில் அமைந்துள்ள தி/ள்.டான் பிளாக் பிரேக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், தொழிற்சாலையானது தற்போது வருடம் ஒன்றுக்கு 25000 மெட்ரிக் டன் என்ற அளவிற்கு சாம்பல் மற்றும் நெகிழ் தன்மை கொண்ட இரும்பு வார்படங்களை கழிவு இரும்பு, பன்றி இரும்பு, இரும்பு உலோக கலவைகள், வார்பட இரும்பு கழிவுகள் மற்றும் பிற சேர்மானங்களை பயன்படுத்தி உற்பத்தி செய்து வருகின்றதென்றும் இதனை ஆண்டொன்றிற்கு 95000 மெட்ரிக் டன் என்ற அளவில் உற்பத்தியை அதிகரிக்க ரூ.60 கோடியில் திட்டம் வகுத்தள்ளது என்றும் இதன் மூலம் 100 பேர் அதிகப்படியான வேலைவாய்ப்பை பெறுவார்கள் என்றும் தெரிவித்து, தொழிற்சாலையின் அமைவிடம் குறித்த தகவல்களை எடுத்துக் கூறினார். அவர் புலிக்காடு ஏரி பறவைகள் சரணாலயமானது 8.5 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது என்றும், அருகாமையில் உள்ள விமான நிலையம் சென்னையில் 45.03 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது என்றும், இத்தொழிற்சலை ஒரு நீர் மாசினையோ அல்லது தொழில் கழிவு நீரையோ வெளியேற்றும் தொழிற்சாலை இல்லை என்றும் தெரிவித்தார்.

திட்ட ஆலாசகர் பின்னர் திட்டத்தின் காற்று மாசு குறித்து தெரிவிக்கையில் தற்போது இரண்டு எண்ணிக்கை 6 டன் திறன் கொண்ட மின் தூண்டல் உலைகள் புகை உறிஞ்சும் அமைப்பு மற்றும் பொதுவான காட்ரிட்ஜ் வடிகட்டி மற்றும் 30 மீட்டர் உயரமுள்ள புகைபோக்கியுடனும், மூன்று எண்ணிக்கை 1 டன் திறனுடைய மின் தூண்டல் உலைகள் புகை உறிஞ்சும் அமைப்பு மற்றும் பொதுவான காட்ரிஜ் வடிகட்டி பைகள் மற்றும் 15 மீட்டர் புகைபோக்கியுடன் அமைந்துள்ளது என்றும், மணலை நீக்கும் பிரிவு மற்றும் மணலை சுத்திகரிக்கும் பிரிவு போன்றவை தனித்தனியே காட்ரிஜ் வடிகட்டி பைகள் மற்றும் 30 மீட்டர் உயர புகைபோக்கியுடன் அமைக்கப்பட்டுள்ளது என்றும், பிற புகை / தூசு உருவாகும் தளவாடங்கள் தனித்தனியாக காட்ரிஜ் வடிகட்டி அல்லது ஈர துடைப்பான் அமைக்கப்பட்டு புகை போக்கியுடன் நிறுவப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். அவர் விரிவாக்கத்தில் அமைக்கப்படவுள்ள தளவாடங்களான 10 டன் திறன் கொண்ட மின் தூண்டல் உலை, கழிவு மணல், கையாளும் பிரிவு, குளிரூட்டும் டிரம் போன்றவை காட்ரிஜ் வடிகட்டி பைகள் மற்றும் புகை போக்கிகளுடன் அமைக்கப்படும் எனவும் தெரிவித்தார். அவர் தொழிற்சாலையில் தற்போது அமைந்துள்ள காற்று மாசு தடுப்பு சாதனங்களின் புகைப்படங்களை காட்டி, காற்றின் தரமானது 10 கி.மீட்டர் சுற்றளவிற்கு ஆய்வுகள் வாயிலாக தரவுகள் சேகரிக்கப்பட்டதென்றும், அதன் படி காற்றின் தரம் நிர்ணயிக்கப்பட்ட தர அளவீடுகளுக்கு உட்பட்டு அமைந்துள்ளது என்றும், அனைத்து காற்று மாசு உருவாகும் பிரிவுகளும் தேவையான காட்ரிஜ் வடிகட்டி பைகள் அல்லது ஈர துடைப்பான்கள் வாயிலாக வெளியேற்றப்படுகிறது / வெளியேற்றப்பட உள்ளது என்பதனால் காற்று மாசடைய வாய்ப்பில்லை என்றும் தெரிவித்தார்.

தொழிற்சாலையின் விரிவாக்கத்தின் தாக்கம் குறித்து விவரித்த திட்ட ஆலோசகர் அவர்கள், விரிவாக்கத்தினால் உருவாகும் அன்றாட கழிவு நீர்,

குளிர்விக்கும் நீர் பிரிவின் கழிவு நீர், உருவாகும் கழிவு உயவு எண்ணையின் அளவு ஆகியவை அதிகரிக்கும் என்றும், இதற்காக அமைக்கப்பட்டுள்ள 25 கிலோ லிட்டர் திறனுடைய அன்றாட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் 40 கிலோ லிட்டர் திறனாக அதிகரிக்கப்படவுள்ளது என்றும், சுத்திகரிக்கப்பட்ட அன்றாட கழிவு நீர் வளாகத்தில் மரம் வளர்க்க பயன்படுத்தப்படும் என்றும், குளிர்விக்கும் நீர் பிரிவிலிருந்து உருவாகும் கழிவு நீர் மறு சூழற்சி செய்யப்படும் என்றும், கழிவு உயவு எண்ணைய் அங்கீகரிக்கப்பட்ட மறு சூழற்சியாளர்களுக்கு விற்கப்படும் என்றும், இத்தொழிற்சாலையில் இருந்து தொழிற்முறை கழிவு நீர் வெளியேற்றப்படாது என்றும் தெரிவித்து, தொழிற்சாலையில் அமைந்துள்ள அன்றாட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கூறுகளை விளக்கினார்.

காற்று மாசு கட்டுப்பாடு குறித்து தெரிவித்த திட்ட ஆலோசகர் அவர்கள், காற்று மாசு உருவாகும் அனைத்து பிரிவுகள்/தளவாடங்களுடன் வடிகட்டி பைகள் அல்லது ஈர துடைப்பான்கள் நிறுவப்படும் என்றும், பசுமை வளையம் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது எனவும், இதில் மரங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்றும், இச்செயல்பாடு காற்று மாசு பரவுவதை தடுக்க உதவும் என்றும், கட்டுமானங்களின் போது உருவாகும் தூசியை கட்டுப்படுத்த தண்ணீர் தெளிப்பான்கள் பயன்படுத்தப்படும் என்றும், அனைத்து தொழிலாளர்களுக்கும் தேவையான தனி நபர் பாதுகாப்பு சாதனங்கள் வழங்கப்படும் என்றும் நிறுவப்பட்டுள்ள டீசல் மின்னாக்கிகள், தேவையான ஒலி மாசு தடுப்பு அமைப்புகளுடன் நிறுவப்பட்டுள்ளது என்றும், பசுமை வளையம் 5.12 ஏக்கர் பரப்பளவில் 1368 மரங்களடன் அமைந்துள்ளது என்றும், இதனுடன் மேலும் 1700 மரக்கன்றுகள் நட்டு வளர்த்து பராமரிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

திட்ட ஆலோசகர், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் அது தொடர்புடைய பணிகளுக்காக மூலதன கணக்கிலிருந்து ரூ.155 லட்சங்கள் செலவிடப்படும் என்றும், இதனை செயல்படுத்துவதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.25 லட்சங்கள் செலவிடப்படும் என்றும், தொழிற்சாலை அதனுடைய பெருநிறுவன சுற்றுச்சூழல் பொறுப்பின் கீழ் ரூ.32 இலட்சத்தை தேர்வழி அரசினர் மகளீர் மேல்நிலைப் பள்ளி மற்றும் புது கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு செலவிட உள்ளது என்றும் தெரிவித்தார்.

பின்னர் பொதுமக்களை தங்களுடைய கருத்துக்களை கூற வருமாறு அழைத்த மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், அனைவருக்கும் கருத்துக்களை தெரிவிக்க வாய்ப்பளிக்கப்படும் என்றும், தெரிவிக்கப்படும் கருத்துகள் பதிவு செய்யப்பட்டு உரிய அதிகார அமைப்புகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், கருத்துக்களை தெரிவிப்போர் தங்கள் பெயர் மற்றும் ஊரினை தெரிவித்து பின்னர் பேசும்படியும் கேட்டுக்கொண்டார்.

எஸ்.ஆர். கண்டிகை ஊராட்சி, பார்த்தபாளையத்தை சார்ந்த ஒன்றிய குழு உறுப்பினரான திரு.ஜெயசந்திரன் அவர்கள் தொழிற்சாலை பெருநிறுவன சமூக

பொறுப்பின் கீழ் செலவழிக்க உத்தேசித்துள்ள ரூ.32 இலட்சத்தில் எந்த தொகையும், தொழிற்சாலை அமைந்துள்ள எஸ்.ஆர். கண்டிகை ஊராட்சிக்கு ஒதுக்கப்படவில்லை என்று கூறினார். இதற்கு பதிலளித்த தொழிற்சாலையின் பிளான்ட் டைரக்டர் அவர்கள் பெருநிறுவன சமூக பொறுப்பு திட்டத்தின் கீழ் எஸ்.ஆர். கண்டிகை ஊராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்படும் என்று தெரிவித்தார். திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் வேலை வாய்ப்புகள் தொழிற்சாலை அமைந்துள்ள ஊராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கூறி, தற்போது பெருநிறுவன சமூக பொறுப்பு திட்டத்தின் கீழ் எஸ்.ஆர். கண்டிகை ஊராட்சிக்கு ஏன் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என அறிய விரும்புவதாக கூறினார் அப்போது மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள ரூ.32 இலட்சம் பெருநிறுவன சுற்றுச்சூழல் பொறுப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை எடுத்து கூறினார். திரு.L.செந்தில் குமார், பிளான்ட் டைரக்டர் அவர்கள். பெருநிறுவன சமூக பொறுப்பின் கீழ் மேலும் ரூ.20 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு அது எஸ்.ஆர். கண்டிகை ஊராட்சியில் செலவிடப்படும் என்று தெரிவித்தார்.

இத்திட்டத்தை வரவேற்ற மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினரான திரு.S.ராமஜெயம் அவர்கள் 100 விழுக்காடு வேலைவாய்ப்புகளும் தொழிற்சாலை அமைந்துள்ள ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

தெலுங்கான மாநிலத்திலிருந்து கலந்து கொண்டு, ஆங்கிலத்தில் பேசிய திரு.சுனந்தாரெட்டி அவர்கள், இத்திட்டம் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதால் அதனை வரவேற்பதாகவும், வேலையில்லா திண்டாட்டம் ஒரு பெரிய மாசுபாடு என்றும், பசுமை வளையம் சட்ட பூர்வ தேவையான 33% விழுக்காட்டிற்கும் மேலாக நிழற்சாலைகள் வாயிலாக அமைக்கப்பட வேண்டும் என்றும், மழை நீர் சேகரிப்பு போன்றவை நிறுவப்பட வேண்டுமென்று தெரிவித்தார்.

தெலுங்கானா மாநிலத்திலிருந்து கலந்து கொண்டு அங்கிலத்தில் பேசிய சுற்றுச்சூழல் ஆர்வலரான திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள், தாம் இத்திட்டத்திற்கான அனுமதியை பரிந்துரைப்பதாகவும். தொழிற்சாலை மூலிகை செடிகளை வளர்க்க வேண்டும் என்றும், மருத்துவ முகாம்களை நடத்த வேண்டும் என்றும், இலவச மருந்துகள் விநியோகிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ஏடூர் கிராமத்தை சேர்ந்த வேலை தேடும் இளைஞரான திரு.R.சேரன் அவர்கள், வேலை வாய்ப்புகள் உள்ளூர் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பாப்பன்குப்பம் கிராமத்தை சேர்ந்த இளைஞரான திரு.சத்யா அவர்கள், தொழிற்சாலையின் விரிவாக்கத்தினால் வேலைவாய்ப்புகள் உருவாகுவது

குறித்து மகிழ்வதாகவும் வேலை வாய்ப்புகள் உள்ளூர் மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்றும், வேலைவாய்ப்புகள் நிரந்தரமானதாக அமைய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

நாகராஜ கண்டிகை கிராமத்தை சேர்ந்த திரு.சுரேஷ் அவர்கள், தற்போதைய உற்பத்தி நிலையிலேயே சிப்காட் தொழிற் வளாகத்தில் மாசுபாடு காணப்படுகிறது என்றும், இத்தொழிற்சாலையின் விரிவாக்கதால், மாசுபாடு அதிகரிக்குமென்றும் எனவே அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் தொழிற்சாலை விரிவாக்கத்தை எதிர்ப்பதாகவும் தெரிவித்தார்.

எஸ்.ஆர். கண்டிகை ஊராட்சியை சேர்ந்த திரு.முரளி அவர்கள் திட்டத்தை வரவேற்பதாகவும், ஆனால் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்புகள் உள்ளூர் மக்களுக்கு வழங்கப்படவில்லை என்றும், வட இந்தியர்களக்கு முன்னுரிமை வழங்கப்படுவதாகவும், சிப்காட் தொழிற்பேட்டை அமைய நிலங்கள் வழங்கிய உள்ளூர் மக்களுக்கு உள்ளூர் தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்புகள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார். மேலும் அவர் பாப்பன்குப்பம் பகுதியில் மருத்துவமனை இல்லை என்றும், எனவே தொழிற்சாலை பெருநிறுவன சமூக பொறுப்பின் கீழ் பாப்பன்குப்பத்தில் மருத்துவமனை அமைத்து தர வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

மேலும், தொழிற்சாலை அமைந்துள்ள பாப்பன்குப்பம் வருவாய் கிராமத்தில் அமைந்துள்ள பள்ளிகளை மேம்படுத்த தொழிற்சாலை முன்வரவில்லை என சுட்டிக்காட்டியவர், பாப்பன் குப்பத்தில் உள்ள பள்ளியை மேம்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேலும் அவர் சிப்காட் வளாகத்தில் எந்தவொரு தொழிற்சாலையும் 33% விழுக்காடு பசுமை வளையம் அமைத்திருக்கவில்லை என்றும், இதனை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கண்காணிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

திரு.L.செந்தில்குமார், பிளான்ட் இயக்குநர் அவர்கள் பெருநிறுவன சமூக பொறுப்பின் கீழ் தொழிற்சாலை அமைந்துள்ள ஊராட்சியின் உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும் என உறுதியளித்தார்.

திரு.ஜெயசந்திரன் அவர்கள் மேலும் தெரிவிக்கையில், நீராதாரம் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றும், காற்றின் தரம் அனுமதிக்கப்பட்ட அளவீடுகளுக்குள் அமைந்துள்ளது என்பது சரியல்ல என கூறினார். இதற்கு பதிலளித்த திட்ட ஆலோசகர் அவர்கள், காற்றின் தரம் குறித்த தரவுகள் மூன்று மாதங்களாக சேகரிக்கப்பட்டது என்றும், அதன் சராசரி மதிப்புகள் அறிக்கையில் வழங்கப்பட்டுள்ளது என்றும், தொழிற்சாலைக்கு தேவையான நீரானது சிப்காட் மூலம் பெறப்படும் என்றும், இத்தொழிற்சாலை அதிகமாக நீரினை பயன்படுத்தும் அல்லது கழிவுநீரை உருவாக்கும் வகை தொழிற்சாலை அல்ல என்றும், குளிர்விக்க தேவையான தண்ணீரானது சுழற்சி செய்யப்படுகிறது என்றும், தெரிவித்து விரிவான தண்ணீர் பயன்பாடு குறித்த தகவல்கள் சுற்றுச்சூழல்

மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளதென்றும், இது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வளைதலத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

திரு.ஜெயசந்திரன் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் தொடர்பான தகவல்கள் போதுமான அளவிற்கு தெரிவிக்கப்படவில்லை என கருத்து தெரிவித்தார். இதற்கு பதிலளித்த மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் தொடர்பான அறிவிக்கை ஒரு ஆங்கில நாளிதழிலும், ஒரு தமிழ் நாளிதழிலும் 06.04.2023 அன்று வெளியிடப்பட்டதென்றும், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை, அவற்றின் தமிழ் மற்றும் ஆங்கில செயல்முறை சுருக்கங்கள் தொடர்புடைய அலுவலகங்களில் கிடைக்குமாறு செய்யப்பட்ட தென்றும் கூறினார். திரு.ஜெயசந்திரன் அவர்கள் கருத்து கேட்பு கூட்டம் தொடர்பான தகவல் ஆட்டோ ரிக்ஷா வாயிலாக விளம்பரப்படுத்துவது பயனுள்ளதாக அமையுமென தெரிவித்தார்.

கூட்டத்தில் பத்து கடிதங்கள் வழங்கப்பட்டது. இவை அனைத்தும் ஆந்திர பிரதேஷம் மற்றும் தெலுங்கான மாநில முகவரியை கொண்டிருந்தன. இவற்றில் திட்டத்தை வரவேற்பதாகவும், அதிக பசுமை வளையம் உருவாக்கப்பட வேண்டுமென்றும், வேலைவாய்ப்புகள் உள்ளூர் மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்றும், மருத்துவ முகாம்கள் நடத்தப்பட வேண்டும் என்றும், இலவச மருந்துகள் விநியோகிக்கப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் கூட்ட நடவடிக்கைகளை சுருக்கமாக எடுத்துக் கூறி, கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
கும்மிடிப்பூண்டி.

மாவட்ட வருவாய் அலுவலர்,
திருவள்ளூர் மாவட்டம்,
திருவள்ளூர்.